


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)

## OCTOBER

*We Are Here..!! To Guide You..!!*



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## அக்டோபர் - 20.10.2018

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, “AK” Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- விருதுகள்





Asia-Europe Meeting
ASEM12 - BRUSSELS 2018





# இந்திய நிகழ்வுகள்

- **Mee Too** இயக்கத்தின் மூலமாக வரும் பாலியல் புகார் குறித்து விசாரிப்பதற்காகவும், பணியிடங்களில் பாலியல் புகார்களுக்காக புதிய சட்டங்களை இயற்றுவது குறித்து பரிசீலிக்கவும், இந்திய உள்துறை அமைச்சர் **"ராஜ்நாத் சிங்"** தலைமையில் மூன்று அமைச்சர்கள் கொண்ட குழுவை மத்திய அரசு நியமித்துள்ளது.
  - மத்திய **பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் மேனகா காந்தி, மத்திய பாதுகாப்புத்துறை** அமைச்சர் **நிர்மலா சீதாராமன் ஆகியோர்** இக்குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

- 100 சதவீதம் வீடுகளை மின்மயமாக்கலை அடைவதற்காக மின்விநியோக நிறுவனங்கள் **(DISCOMs – Distribution Companies)**, மாநிலங்களின் மின்துறைகள் மற்றும் அவற்றின் ஊழியர்களுக்கு உத்வேகத்தை அழிப்பதற்காக மத்திய அரசானது **சௌபாக்கியா திட்டத்தின்** கீழ் விருது வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
  - சௌபாக்கியா திட்டமானது **பிரதான் மந்திரி சஹஜ் பிஜ்லி ஹர் கர் யோஜனா** என்ற பெயரிலும் அறியப்படுகிறது.

- உலகிலேயே அதிக உயரமான இடத்தில் இரயில் வழித்தடம், இந்தியாவில் உள்ள **இமாச்சலப் பிரதேசத்தின் பிலாஷ்பூர் - மணாலி** – லே ஆகிய இடங்களை இணைக்கும் வகையில் 465 கி.மீட்டர் தூரத்திற்கு சுமார் 5 ஆயிரத்து 360 மீட்டர் உயரத்தில் இரயில் வழித்தடத்தை அமைக்க உள்ளதாக இரயில்வேத்துறை அறிவித்துள்ளது.

- குறிப்பிட்ட புவியியல் அமைப்பின் சிறப்புத்தன்மை சார்ந்து உற்பத்தியாகும் பொருட்களுக்கு அவற்றின் தரம் சார்ந்து வழங்கப்படும் புவிசார் குறியீடு **(Geographical Indication) பீகார்** மாநிலத்தில் விளையும் **ஷாஹி லிச்சி (Shahi Litchi)** பழத்துக்கு

வழங்கப்பட்டுள்ளது.

## உலக நிகழ்வுகள்

- பின்லாந்து நாட்டின் வல்லுனர்கள் குழுவான செயற்கை நுண் அறிவாற்றல் **(artificial intelligence)** துறை வெளியிட்டுள்ள செயற்கை நுண்ணறிவாற்றலில் சிறந்த நாடுகளின் பட்டியலில், **இந்தியா 13வது** இடத்தைப் பிடித்துள்ளது.
  - இப்பட்டியலில் முதல் இடத்தில் **அமெரிக்காவும், சீனா இரண்டாவது** இடத்திலும் உள்ளது.

- வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு, சுற்றுலா ஆகிய துறைகள் குறித்து பேச்சு வார்த்தை நடத்தி ஒத்துழைப்பு நல்கிட, **12வது ஆசிய-ஐரோப்பிய நாடுகளுக்கான** மாநாடு பெல்ஜியம் நாட்டின் **பிரஸ்ஸல்ஸ் நகரில்** அக்டோபர் 18 அன்று தொடங்கி உள்ளது.
  - இக்கூட்டத்தில், இந்தியா சார்பில், துணைக் குடியரசுத் தலைவர் வெங்கையா நாயுடு பங்கேற்றுள்ளார்.

- **உலக நாடுகளுக்கிடையே பொருளாதார வளர்ச்சி (Global Competitiveness Report 2018)** ரீதியிலான போட்டி நிலவரம் குறித்து சர்வதேச பொருளாதார மையம் வெளியிட்டுள்ள சர்வதேச பொருளாதார போட்டிக் குறியீடு பட்டியலில் இந்தியா **58வது இடத்தைப் பிடித்துள்ளது**. கடந்த ஆண்டைக் காட்டிலும் 5 இடங்கள் முன்னேறியுள்ளது. சீனா இப்பட்டியலில் 28வது இடத்தைப் பிடித்துள்ளது.
  - அமெரிக்காவானது இப்பட்டியலில் **முதலிடத்திலும், சிங்கப்பூர் மற்றும் ஜெர்மனி இரண்டாம் மற்றும் மூன்றாம்** இடம் பிடித்துள்ளது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- **அர்ஜெண்டினாவின் பியூனஸ் ஏர்ஸ் நகரில்** நடைபெற்று வரும் இளைஞர் (யூத்) ஒலிம்பிக் போட்டியில், ஆண்களுக்கான 5 ஆயிரம் மீட்டர் நடைபந்தயத்தில் இந்திய வீரர் **சுராஜ் பன்வார்** வெள்ளிப்பதக்கத்தை வென்றுள்ளார்.

## விருதுகள்

- அமெரிக்காவின் ஹீஸ்டன் நகரில் இருந்து வெளிநாடுகளுக்கு சிறுமிகள், பெண்கள் உட்பட சட்டமீறலாக நடைபெற்று வரும் ஆள்கடத்தலை தடுத்ததற்காக, இந்திய வம்சாவளி பெண்ணான **"மினால் பட்டேல் டேவிஸ்"** என்பவருக்கு அமெரிக்க ஜனாதிபதியின் உயரிய விருது **(Presidential Medal for Combating Human Trafficking)** வழங்கப்பட்டுள்ளது.
  - இவ்விருதை அமெரிக்காவின் வெளியுறவுத் துறை அமைச்சர் மைக்கேல் பாம்பியோ வழங்கினார்.

We Shine Academy TM